


புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | நவம்பர் 03, 2022 | புரட்சி 21 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00


# பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு எதிராகத் தொடர்ந்த ‘குடிஅரசு’ வழக்கைத் திரும்பப் பெற்றது

***கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு எதிராகத் தொடங்கப்பட்ட ‘குடி அரசு’ வழக்கு 15 வருடங்களாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்நிலையில், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வழக்கைத் திரும்பப் பெற்றுள்ளது.***

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தற்போது திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு எதிராக 1925 முதல் 1949 வரை பெரியார் நடத்தி வந்த குடிஅரசு பத்திரிக்கையில் உள்ள மற்றும் பெரியாரின் எழுத்துகளும் பேச்சுக்களும் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திற்கு மட்டுமே சொந்தமானது என்றும், தங்களுக்கு மட்டுமே பதிப்புரிமை உள்ளது என்றும் தங்களைத் தவிர யாருக்கும் உரிமை இல்லை என்றும், கொளத்தூர் மணி பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுக்களையும் புத்தகமாக வெளியிடக் கூடாது என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அவ்வாறு வெளியிட முயற்சித்ததற்காக ரூ. 15 இலட்சம் இழப்பீடாக தர வேண்டும் என்று அன்றைய பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தது.

ஆரம்பத்தில் இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி கொளத்தூர் மணிக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பித்து இருந்தார். தடையை விலக்கக்கோரி கொளத்தூர் மணி தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதி கே.சந்துரு அவர்கள் தடையை விலக்கி பெரியாரின் எழுத்துகளுக்கு யாரும் சொந்தம் கொண்டாட முடியாது என்றும் யார் வேண்டுமானாலும் தொகுத்து வெளியிடலாம் என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதனை எதிர்த்து பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. ஆரம்பத்தில் தனி நீதிபதியின் உத்தரவிற்கு தடை விதித்த இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, இறுதியாக அத் தடையை விலக்கி பெரியாரின் எழுத்துகளுக்கும் பேச்சுக்கும் என்றுமே பெரியார் பதிப்புரிமையோ சொந்தமோ கோரவில்லை என்றும், பெரியார் இறந்து 25 வருடங்கள் கழித்து புத்தகங்கள் தொகுக்கப் பட்டதால் பதிப்புரிமை சட்டப்படி தடை விதிக்க முடியாது என்றும் குடிஅரசு பத்திரிகைகளில் வந்த செய்திகளைத் தொகுத்து வெளியிட யாருக்கும் தடை கிடையாது என்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் திரு இப்ராஹிம் கலிஃபுல்லா மற்றும் திரு கிருபாகரன் ஆகியோர்அடங்கிய அமர்வு அதிரடியாக உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் குடிஅரசில் வெளியான பெரியாரின் எழுத்துக்களும் பேச்சும் தொகுத்து 27 தொகுதிகளாக வெளியிட்டது. அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத் திலும் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் மேல்முறையீடு செய்ய, அந்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கே ஏற்றுக் கொள்ளாமல் தள்ளுபடி செய்து விட்டது. எனவே பெரியாரின் எழுத்துகளுக்கும், அவரின் பேச்சுகளும் பொதுத்தளத்திற்கு வந்துவிட்டது, ஆகவே யார் வேண்டுமானாலும் வெளியீடு செய்யலாம், அது பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கு தான் சொந்தம் என்று தனிப்பட்ட உரிமை கொண்டாட முடியாது என்ற ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்ற இருவர் ஆயம் இடைக்கால உத்தரவினை உறுதி செய்து உத்தரவு பிறப்பித்து இருந்தது.

மற்றொரு பிரதிவாதியான திரு. கோவை இராமகிருட்டிணன் மீதான வழக்கை மட்டும் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் 2019ஆம் ஆண்டில் திரும்பப் பெற்றுக் கொண்டது.

இடைக்காலத் தடைகள் நீக்கப்பட்டிருந்தாலும், குடிஅரசு வெளியிட்டதற்கான இழப்பீடு 15 இலட்சத்தை வழங்கக் கோரி பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் தொடர்ந்திருந்த அசல் வழக்கைத் தொடர்ந்து நடத்தினர். மேற்படி வழக்கு இறுதி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு மாஸ்டர் கோர்ட் முன்னிலையில் சாட்சி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது. பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி வீரமணி வாக்குமூலம் அதாவது பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருந்தாலும் அவர் தன்னை சாட்சியாக விசாரிக்காமல் தவிர்த்துக்கொண்டு, அதன் உறுப்பினர்களில் ஒருவரான திரு. கலிபூங்குன்றன் முதல் சாட்சியாக பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் விசாரிக்கப்பட்டார். வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியாக கொளத்தூர் மணி விசாரிக்கப்படவிருந்தார்.

இந்நிலையில் இன்று 31.10.2022 பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனம் சார்பில் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கினைத் திரும்பப் பெறுவதாக நீதிபதி எம். சுந்தர் அவர்கள் முன்பு பட்டியலிடப்பட்டது. பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் சார்பில் வழக்குரைஞர் டி. வீரசேகரனும், கொளத்தூர் மணி சார்பில் மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி அவர்களும் நேர்நின்றார்கள். மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி மேற்படி வழக்கைத் திரும்பப் பெறுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும், 15 வருடங்களாக பிரதிவாதி கொளத்தூர் மணி இந்த வழக்கினால் அலைக்கழிக்கப்பட்டுள்ளார் என்றும் அதற்காக நீதிமன்றம் காஸ்ட் (cost) அதாவது செலவுத் தொகை போட வேண்டும் என்றும் வாதிட்டார்.

நீதிமன்றம் வழக்கறிஞர் துரைசாமியின் கருத்தை ஏற்றுக் கொண்டாலும் நீதிபதி அவர்கள், அவர்களாகவே வந்து வழக்கைத் திரும்பப் பெறுவதாக சொல்கிறார்கள்; மேலும் இது பெரியார் பற்றிய வழக்கு, விட்டு விடலாமே என்று கேட்டுக் கொண்டார், நான் சொல்லுவதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் வழக்கறிஞர் துரைசாமியிடம் நீதிபதி கேட்டுக் கொண்டார். காஸ்ட் (செலவுத்தொகை) போடுவ தென்றால் அவர்களையும் விசாரித்த பின்பு காஸ்ட் போட நேரிடும் என்றும், அதே நேரத்தில் அவர்களாகவே வரும்போது ஏன் நீங்கள் ஒத்துக் கொள்ளக் கூடாது என்றும் நீதிபதி திரு எம். சுந்தர் அவர்கள் மூத்த வழக்கறிஞர் துரைசாமி அவர்களிடம் கேட்டுக் கொண்டார். வழக்கறிஞர் துரைசாமியும் நீதிபதியின் பெருந்தன்மைக்கு நன்றி பாராட்டி நீதிபதி சொல்வதை ஏற்றுக்கொண்டு வழக்கினை நீதிமன்ற போக்கிற்கு விட்டுக் கொடுத்தார். அதனால் நீதிமன்றம் மேற்படி வழக்கை நிபந்தனை இன்றி தள்ளுபடி செய்தது. இதன் மூலம் பெரியாரின் எழுத்துகளும் பேச்சும் பொது மக்களுக்கு சொந்தமாகிவிட்டது. இனிமேல் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனமும், திரு.கி. வீரமணி அவர்களும் பெரியாரின் பேச்சையும், எழுத்தையும் தனித்து சொந்தம் கொண்டாட முடியாது.

இந்த வழக்கில் ஆரம்பம் முதல் கடைசி வரை மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி அவர்களும், வழக்கறிஞர் வை. இளங்கோவனும் கடுமையாக வாதாடி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களுக்கு வரலாறு காணாத மாபெரும் வெற்றியைத் தேடி கொடுத்துள்ளனர்.

**(வழக்கறிஞர் வை.இளங்கோவன்)**

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ விலை மாற்றம் குறித்த அறிவிப்பு

கொரோனா காலத்திற்குப் பின் அச்சுத்தாள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தாள் விலை உயர்வால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக் காரணமாக வேறு வழியின்றி நமது ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் சந்தா தொகை உயர்த்தப்படுகிறது.

ஆண்டு சந்தா ரூ. 300/- ஆகவும்

5 ஆண்டு சந்தா ரூ. 1500/- ஆகவும்

– உயர்த்தப்பட்டுள்ளது.

தோழர்கள், வாசகர்கள் வழக்கம் போல் தங்கள் ஆதரவினைத் தொடர்ந்து வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.300**

தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

# ஜம்புகர் – நரிக்கும், மாண்டவியர் – தவளைக்கும், சனகர் – நாயிக்கும் பிறந்த ரிஷிகளா பாரதத்தை உருவாக்கினார்கள்?

பாரதம் (இந்தியா) ரிஷிகளாலும், சனாதன தர்மத்தாலும் உருவாக்கப்பட்டது என்று அரசியல் சட்டத்திற்கு எதிராக பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்து, 29.10.2022 அன்று சன் நியூஸ் “கேள்விக் களம்” நிகழ்வில் கலந்து கொண்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன் வைத்த கருத்துகள்.

தமிழ்நாட்டின் ஆளுநர், அரசியல் சட்டத்திற்கு எதிராக, தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கு எதிராக அரசியலை பேசுபவராகத்தான் தொடர்ந்து இருந்து வருகிறார். அவர் தமிழ்நாட்டுக் கருத்தியலுக்கு எதிரான மும்மொழிக் கொள்கை, தேசிய கல்விக் கொள்கை ஆகியவற்றை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பேசி வருகிறார். ‘சனாதன தர்மம்’ என்பதை மீண்டும் மீண்டும் ஓங்கி ஒலிப்பவராகத் தான் ஆளுநர் இருக்கிறார். இப்போது அந்த உரையிலும் சனாதன தர்மத்தைப் பற்றி பேசியிருக்கிறார்.

சனாதன தர்மம் என்பது, ‘வேதங்களையும், ஸ்ருதிகளையும், ஸ்மிருதிகளையும் அடிப்படியாகக் கொண்டு அமைக்கப்பட்டது’ என்பதை ‘சனாதன தர்மா’ என்ற நூலே விளக்குகிறது. இது காசி பல்கலைக் கழகத்தில் எழுதப்பட்ட நூல்.

ஆளுநர் தற்போது புதிதாக ஒன்றை கூறியிருக்கிறார். “பாரதத்தை ரிஷிகளும், சனாதன தர்மங்களும் தான் உருவாக்கின” என்று பேசியிருக்கிறார். சனாதன தர்மம் என்பது ஆரிய வர்த்தத்தைத் தான் பேசுகிறது; விந்தியத்திற்கும், இமயமலைக்கும் இடையே உள்ள ஆரிய வர்த்தத்தைப் பற்றித் தான் பேசுகிறது. ஆனால் இவர் புதிதாக ‘பாரதம் முழுவதை பற்றியும் சனாதன தர்மம் பேசுகிறது’ என்கிறார். பாரதம் இப்படி ஒன்றாக இருந்ததற்கான ஆதாரம் எதில் உள்ளது? எந்தவொரு செய்தியும் ஆதாரப்பூர்வமாக கூறுவதில்லை. இந்தியா விடுதலை அடைந்தது என்று கூறப்பட்ட போது கூட 500 சமஸ்தானங்கள் தனித்து தான் இருந்தன. அவர்கள் விரும்பினால் இந்தியாவோடு இணையலாம் அல்லது பாகிஸ்தானோடு இணையலாம் இல்லையென்றால் தனித்து இருக்கலாம் என்று தான் அப்போது பேசப்பட்டது. இது தான் உண்மை.

ஆனால், இவர் ஏதோ மிக நீண்ட காலத்திற்கு முன்பே உருவாக்கிவிட்டார்கள் அதை தர்மம் தான் ஆட்சி செய்தது, அரசர்கள் ஆளவில்லை என்கிறார். இது பொய்யான செய்தி.

இந்திய ஒன்றியத்தில் ஆளுநர்கள் என்பதே, அந்தந்த மாநிலங்களில் அரசியல் சட்டத்திற்கு இணக்கமான செயல்பாடுகள் நடக்கிறதா அல்லது முரணான செயல்பாடுகள் நடக்கிறதா ? அரசியல் சட்டத்தை மீறி செயல்படுகிறார்களா ? என்பதை பார்த்து அதை சரி செய்வதற்கு அல்லது உதவுவதற்கு அல்லது அதை ஒன்றிய அரசிற்கு அறிவிப்பவராக இருப்பது மட்டும் தான் ஆளுநரின் பணி. ஆனால், ஆர்.என்.ரவி எப்போதுமே அரசியல் கருத்துக்களை தொடர்ச்சியாக பேசுபவராகத்தான் இருக்கிறார். சனாதன தர்மம் என்பது நால் வர்ணத்தைப் பேசுகிறது. அந்த தர்மம் தான் பாரதத்தையே உருவாக்கியது என்கிறார். இது எவ்வளவு நகைப்புக்குரிய செயல். இது மட்டுமல்லாமல் காசி - இராமேஸ்வரத்திற்கும் தொடர்பு இருப்பதாக சிலப்பதிகாரம் கூறுகிறது என்றெல்லாம் பேசுகிறார். இவற்றையெல்லாம் கேட்கிறபோது வியப்பாக இருக்கிறது. ஆளுநர் முடிவுடன் தான் இருக்கிறார். தன்னை நியமித்த அரசுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று, அந்த அரசின் கருத்துக்களை தமிழ்நாட்டில் பரப்ப வேண்டும் என்று கருதுகிறாரே தவிர தமிழ்நாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு கூட ஒப்புதல் தருவதற்கு நேரமில்லாமல் சனாதன தர்மத்தை பரப்புவதில் அவர் முழுமையாக ஈடுபட்டிருக்கிறார். அவர் பேசியது ஆளுநர் என்ற தகுதிக்கு சரியானது அல்ல; அவர் பேசியதும் உண்மைக்கு புறம்பான செய்தி.

இந்த சனாதன தர்மம் என்பதைப் பற்றி Indianculture.gov.in என்ற இணையதள பக்கத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட புத்தகத்தில் சனாதன தர்மத்தை பற்றி, ‘In later days the religion was called the hindu religion.’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. “The sanatana dharma means eternal religion, the ancient law and it is based on vedas and sacret books very long ages ago” என்றும் கூறுகிறார்கள். இது எதன் அடிப்படையில் இருக்கிறது என்பதையும் கூறியிருக்கிறார்கள். சமஸ்கிருத ஸ்லோகத்தை கூறிவிட்டு சொல்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் ‘He for the shake of all the protection assigned Separate karmas to those born of his mouth, arms, thighs and feet’ என்று 121ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், பிராமணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்திரர்களைப் படைத்ததைப் பற்றி தான் பேசுகிறார்கள். எதுவாக இருந்தாலும் மாறாதது எதுவும் இல்லை என்று மார்க்சியம் கூறுகிறது. காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப மாற்றிக் கொள்ளக் கூடியது தான் கொள்கையாக இருக்க முடியுமே தவிர அறிவியல் வளராத காலத்தில் செய்து கொண்டிருந்தவைகளை இப்போது ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே மாறாதது (சனாதனம்) என்று எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இவர்கள் விமர்சிக்கும் கிறிஸ்துவ மதத்தில் ஒரு காலத்தில் கலிலியோவிற்கு தண்டனை கொடுத்தார்கள், புரூனோவை நெருப்பில் போட்டு எரித்தார்கள் “உலகம் உருண்டை” என்று கூறியதற்காக. ஆனால் தற்போது 400 ஆண்டுகள் கழித்து அதற்காக வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். அறிவியல் உண்மையை கண்டுவிட்டது என்று கூறி. ஏனென்றால் பைபிளில் உலகம் உருண்டை என்று எங்குமே குறிப்பிடப்படவில்லை. ஆனால் காலத்திற்கேற்ப மாற்றி ஏற்றுக் கொண்டுவிட்டார்கள்.

சனாதன தர்மத்தில் கூறியுள்ளவாறு மனிதர்கள் பிரம்மாவின் வாய், கைகள், தொடை, காலில் பிறக்கவில்லை, பெண் - ஆணிற்குத் தான் பிறந்தான், என்பதை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், “இல்லை இது என்றென்றும் இருப்பவை’ என்று கூறி மாற்றிக் கொள்ளாமல் இருப்பது சரியல்ல. ஒவ்வொரு மனிதருக்கும் அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமையின் படி தான் இருக்க வேண்டும். ஏதோ ஒரு காலத்துல் பேசப்பட்டதை வைத்துக் கொண்டு ‘நீங்களெல்லாம் கீழானவர்கள், நாங்களெல்லாம் உயர்ந்தவர்கள்” என்று பேசக்கூடாது.

ரிஷிகளால் உருவாக்கப்பட்டது என்கிறார் ஆளுநர். கீழ்காணும் இந்த ரிஷிகளால் உருவாக்கப்பட்டிருக்குமோ, “கலைக்கோட்டு முனிவர் - மானுக்கும், ஜம்புகர் - நரிக்கும், கவுதமர் - மாட்டுக்கும், மாண்டவியர் - தவளைக்கும், காங்கேயர் - கழுதைக்கும், கனநாதர் - கோட்டானுக்கும், சனகர் - நாயிக்கும், சுகர் - கிளிக்கும், ஜம்பவந்தர் - கரடிக்கும், அஸ்வத்தமன் - குதிரைக்கும் பிறந்தார்கள்” என்று புராணம் கூறுகிறது. இந்த ரிஷிகளை குறிப்பிடுகிறாரா? இவர்கள் தான் எங்களுக்கான சட்டங்களை உருவாக்கினார்கள், இந்தியாவை உருவாக்கினார்கள் என்று கூறுகிறாரா? சிலப்பதிகாரத்தை குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரத்தில், “பாட்டுப்பாடுகிற பார்ப்பனர்கள், ஊரைவிட்டு வெளியேற்றி புறச்சேரியில் வைத்திருக்கிறார்கள்” என்பதை சிலப்பதிகாரம் கூறியிருக்கிறது.

இதை ஏற்றுக் கொள்வார்களா ?

சனாதன தர்மம் என்பது பழைய காலத்து நாவல். இதை ஆளுநரான ஒருவர் பேசுவதும், இதன் வழியாக அமைதியைக் குலைப்பதற்கும், தான் யார் என்பதை அடையாளப்படுத்தவும் தான் ஆளுநர் இவ்வாறு பேசி வருகிறார். தமிழ்நாடு முற்றிலும் வேறான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. அர்ச்சகர் பற்றி, “பேர் கொண்ட பாப்பான் பிரார் தன்னை அர்ச்சிக்கில், போர் கண்ட மன்னருக்கு பொல்லா வியாதியாம்; பார் கொண்ட நாட்டுக்கு பஞ்சமாம்” இதைத் தான் தமிழ்நாட்டு வேதம் கூறுகிறது. திருமூலர் சொல்வதை ஏற்றுக் கொள்வார்களா? ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு பண்பாடு, தத்துவம் உள்ளது. அதை ஒட்டுமொத்தமாக கூறுகிறபோது தங்களுக்கு சார்பான, தங்களுக்கு சாதகமான, தங்களை உயர்ந்தவர்களாக காட்டும் தத்துவத்தை மட்டும் கூறுவது சரியல்ல. ஆளுநர் கண்டிக்கத்தக்கவர்.



## வேத எதிர்ப்பு

சுருக்கமாகச் சொல்லப் போனால் வேத எதிர்ப்பு சங்கதி தோன்றியது இன்று நேற்றல்ல, “ஈரோட்டு இராமசாமி”யும், திராவிடர் கழகமும் தோன்றிய காலத்திலல்ல; புராண காலத்திலேயே வேதம் வெறுக்கப்பட்டு வந்திருக்கிறது என்று தெரிகிறது. மற்றபடி வேதத்தை ஏன் படித்தாய்? என்ன படித்தாய்? என்பது அக்காலத்தே தெரியாது. காரணம் அது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரிடையே வாய்மொழியாக உள்ளத்தில் ஒரு கருத்தளவிலேயே இருந்து வந்திருக்கிறது என்றாலும், இராவணன், இரணியன் ஆகியோர் வேதத்தினை முழுவதும் படித்ததினாலேயே அவர்கள் வேதத்திற்கும், யாகத்திற்கும், தேவர்களுக்கும், பிராமணர் களுக்கும் விரோதிகளானார்கள் என்பதாகத் தெரிகிறது.

எந்த மொழியில் வேதம் ஓதப்பட்டு வந்தது என்றே சொல்ல முடியாது. சமஸ்கிருத மொழியே வேதகாலத்தில் கிடையாது. சமஸ்கிருதம் என்று தனி மொழியே இருந்ததில்லை. அந்தக் காலத்திலே ஆரியர்கள் பேசிய மொழி பல மொழி, மலைவாசி மொழிகள். அப்படிப்பட்ட சகல மொழிகளையும் கிரமப்படுத்தி சமஸ்கிருதம் சகலத்தையும் ஒன்றாக்கிய மொழி என்றாக்கினார்கள். சமஸ்கிருதம் என்ற பதத்துக்கு அர்த்தமே அதுதான். அப்படிச் செய்யும்போது திராவிட மொழி களிலிருந்தும் பல சொற்களை ஆரியர்கள் எடுத்துக் கொண்டனர். ஆனால், அச்சொற்களின் ஒலியை மட்டும் சிறிது மாற்றியமைத்துத் தனிமொழி போலத் தோன்றுமாறு செய்துவிட்டனர் என்பதாக “என்சைக்ளோபீடியா” எனும் சர்வ பொருட் களஞ்சியம் கூறுகிறது.

இங்குள்ள நமது தமிழ்ப் புலவர்கள் எனப்படுவோர் தமிழைப் பிழைப்புக்காக கற்று வைத்துக் கொண்டு பாடுபடு கின்றனரே அன்றி, தமிழ்மொழி வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சிக்கென இம்மியும் காரியத்தில் இறங்கியது கிடையாது. தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள் என்பதாகத் தமிழிலும் கடவுள் பாடல்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளுமே வேதத் தேவர்களைக் கடவுளாகக் கொண்டு பிரார்த்தனைப் பாடல்களாகப் பாடப்பட்டிருக்கின்றனவே அல்லாது, தமிழர்களுக்கான கடவுள்களைக் குறித்து ஒரு சொல்லும் சொல்வதில்லை.

–பெரியார் எழுதிய “புராணங்களை எரிக்க வேண்டும் ஏன்” நூலிலிருந்து

# வைதீக எதிர்ப்பு; தனி மனிதர் மற்றும் ஒரு சமூகத்தின் சுயமரியாதையை உறுதி செய்கிறது

***“வைதீகத்தை எதிர்த்த வள்ளலார்” என்ற தலைப்பில், 22.10.2022 அன்று சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் கருணானந்தன் ஆற்றிய உரை.***

இந்து என்ற பெயரில் பிறர் மீது தலைமையும், புனிதம் கொண்டவனாகவும் தன்னை காண்பிப்பதற்கு ஒரு அமைப்பை உருவாக்கி இருக்கின்றார்களல்லவா ? அதைத் தான் நாம் மறுக்கின்றோம். வள்ளலார், அந்த பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்காகவும், அதுமட்டுமில்லாமல் இந்த மூடத்தனங்கள் நிறைந்துள்ள சடங்குகளை தவிர்த்து ஒரு தெய்வ நம்பிக்கையைப் பெறுவதற்காகவும் ஒளி வழிபாட்டைக் கொண்டு வந்தார். ஒளி வழிபாடு என்றால் அறிவு வழிபாடு என்று பொருள். ஒளி அறிவைக் குறிக்கும். ஒளி உள்ள இடத்தில் இருள் விலகும். அறிவூட்டுவது ஒளி. இதைத்தான் வள்ளலார் கொண்டு வந்தார். அக்கினி வழிபாடு அல்ல. அது பிராமணர்க்கு உரியது, அழிவுக்குரியது. ஒளி வழிபாடு, அறிவு வழிபாடு; வள்ளலார் காட்டிய வழிபாடு. அப்படியென்றால் இந்த சிலை, கோவில் அனைத்தையும் கடந்து அவர் வருகிறாரல்லவா ? அதனடிப்படியில் மனிதர் மீது கருணை, ஜீவகாருண்யம் என்கிறார். மதம் என்பது உன் கடவுளைப் பற்றி கவலைப்படுவதல்ல; உன் சக மனிதனைப் பற்றிக் கவலைப்படுவது என்று கூறினார் வள்ளலார். அந்த வள்ளலார் தான் வைதீகத்தின் எதிரி.

நாம் இன்று பல பெயர்களில் வைதீகத்திற்கு துணை போய் கொண்டு இருக்கிறோம். சடங்குகள் அனைத்துமே நம்மை மடமைக்கு கொண்டு செல்பவை. சடங்குகளிலிருந்து மீட்க வேண்டும். நம்பிக்கை அறிவு வழி பட்டதாக இருக்க வேண்டும். எந்த ஒரு நம்பிக்கையும், ஒரு தனி மனிதன் அல்லது ஒரு சமூகத்தின் சுயமரியாதையை உறுதி செய்வதாக இருக்க வேண்டும். வைதீகம் சுயமரியாதையை மறுக்கின்றது. நாம் பேசுகிற பகுத்தறிவு வாதம் என்பது ஒவ்வொரு தனி மனிதருக்கும், சமூகத்திற்கும் சுயமரியாதையை, மாண்பை, அங்கீகாரத்தை ஏற்றுக் கொள்ள வைக்கிறது. வைதீகத்தை எதிர்த்த வள்ளலாரும் மனிதனை மய்யப்படுத்தினார்; பெரியார் எதிர்க்கின்ற போதும் மனிதனை மய்யப் படுத்தினார். நாம் மனிதர் மீது அக்கறை கொண்டவர்கள். மனிதத்தின் மீது அக்கறை கொண்டவர்கள். வெறும் மொழிப் பற்றின் காரணமாக நாம் வள்ளலாரைப் போற்றவில்லை. தமிழால் நாம் அழிந்ததும் உண்டு. இதே தமிழை வைத்துக் கொண்டு நம்மை சிதைத்தவர்களும் உண்டு. மொழி உண்டு; ஆனால் மொழி சொல்வதையெல்லாம் நாம் ஏற்க வேண்டும் என்பது பொருந்தாது. ஆகவே தான் நாம் கூறுகிறோம், இந்த கோவில்கள் வந்தது பேரரசு காலத்தில்; ஆகமங்கள் உருவாக்கப்பட்டது பேரரசு காலத்தில்.

பேரரசுகள் காலத்திற்கு முன்பு, ‘செயல்முறைகள்’ வழிபாட்டிற்கு தடையாக இருந்தது இல்லை. கடவுளுக்கும், கடவுளை வேண்டி நிற்பவனுக்கும் மொழித் தடை கிடையாது, சடங்குத் தடை கிடையாது. சாதாரண நிலையில் இருந்தது. இவை நிறுவன மயப்படுத்தப்படும் போது, நிறுவனத்தின் மூலம் பயன் பெறுபவர்கள் இருக்கின்றார்கள். பேராசிரியர் அரசு பேசும் போது, ’கிறிஸ்துவ மெஷினரிகளின் ஜீவ காருண்யத்தைப் பற்றி’ கூறினார். வள்ளலார், “கருணையில்லா அரசு கடுகி ஒழிக” என்றார். ஆனால் எந்த அரசர் காலத்திலாவது கருணை இருந்திருக்கிறதா ?

பல்லவர் காலத்தில், இரண்டாம் நரசிம்மவர்மன். அவன் தான் இங்கே பெரும்பாலான கைலாசநாதர் கோவில்களைக் கட்டியதாக கூறுவார்கள். அவன் காலத்தில் பிரம்மதேயங்கள் நிறைய கொடுக்கப்பட்டது. நிறைய கோவில்கள் இருந்தன. அந்த கால கட்டத்தில் பெரிய பஞ்சம் ஏற்பட்டது, பஞ்சத்தில் உழன்று மக்கள் இறந்து மடிந்து கொண்டிருந்தார்கள். பஞ்சத்தில் மடிந்த மக்களுக்காக அந்த மன்னன் ஒரு துரும்பைக் கூட கிள்ளி போடவில்லை. அப்போது மக்களுக்காக கஞ்சித் தொட்டி திறந்தவர்கள் பவுத்தத் துறவிகள். பவுத்த சங்கங்கள் அந்தப் பணியை செய்தன. இந்தியாவில் பெரும்பாலும் அப்போது அப்படித்தான் இருந்தன. நமது மக்களின் கல்விக்கு எந்த மானியமும் தராதது தமிழ் அரசுகள் தானே ? இராஜ இராஜ சோழன் என்றாலும் இராஜேந்திர சோழன் என்றாலும் எங்க ஜாதிக்காரர் என்று சொந்தம் கொண்டாடுகிறார்கள். சரி இந்த மன்னர்கள்



தமிழுக்காக, தமிழ் கல்விக்காக என்ன செய்தார்கள் ? என்று கேட்டால் பதிலை கூற மறுக்கிறார்கள். “தமிழுக்கும் செய்தார்கள்” என்று பொத்தாம் பொதுவாக பேசுகிறார்கள்.

மனுநீதியைப் பற்றி கவலைப்பட்ட பேரரசுகள் திருக்குறளை கண்டு கொள்ளவில்லை. இந்த மக்களாட்சியையாவது உறுதி செய்ய வேண்டு மானால், நம்மை எதிர்நோக்கியுள்ள இந்துத்துவ அச்சத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வைதீக எதிர்ப்பு என்பது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்திய ஒன்றியத்திற்கே புதியது கிடையாது. வைதீகம் என்றால் பிராமணீய தத்துவ மேலாண்மை, படிநிலை சமூகம் என்பவைகளாகும். முதலில் அந்த வைதீகத்தை எதிர்த்தவர்கள் சிரமணர்கள், புத்தர், மகாவீரர் போன்றவர்கள். என்று வைதீகம் தோன்றியதோ அன்றே வைதீகம் எதிர்க்கப்படுகின்றது. இது வரலாற்றில் மறைக்கப்படுகின்றது. ஆனால், அரசன், புரோகிதன் கூட்டு உறவு மூலமாக வைதீகம் தன்னை தக்கவைத்துக் கொண்டது. தமிழ்நாட்டில் வள்ளுவர் யாகங்களை புறம் தள்ளி எழுதியிருக்கிறார். யாக மறுப்பு சொல்ல வேண்டிய கட்டாயம் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது. சில மன்னர்கள், வான வரம்பன், இராஜ சூயம்வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி இவர்களெல்லாம் யாகம் செய்தார்கள். ஆனால் அந்த யாகம் மக்களை ஈர்க்கவில்லை. அன்று நிலம் கொடுக்கப்படவில்லை. பொற்கிழிகள் கொடுக்கப்பட்டன. அப்பொழுது முதலே இந்த வைதீக மறுப்பு, எதிர்ப்பு என்பது

- *“மதம் என்பது உன் கடவுளைப் பற்றி கவலைப்படுவதல்ல; உன் சக மனிதனைப் பற்றிக் கவலைப்படுவது” என்றார் வள்ளலார்.*
- *எந்த ஒரு நம்பிக்கையும், ஒரு தனி மனிதன் அல்லது ஒரு சமூகத்தின் சுயமரியாதையை உறுதி செய்வதாக இருக்க வேண்டும்.*
- *மனுநீதியைப் பற்றி கவலைப்பட்ட தமிழ்ப் பேரரசுகள் திருக்குறளைக் கண்டு கொள்ளவில்லை.*

இருக்கிறது. இளையான்குடி செப்பேட்டில், ‘பிரம்மதேயம் கொடுத்ததை எதிர்த்து, நிலத்தை இழந்த கம்பதேயன் என்பவன் போர்க்கொடி தூக்குகின்றான், அவனை பாண்டியன் படை அனுப்பி கைது செய்து தலையை வெட்டுகிறான்.’ மண்ணின் மைந்தன் இழந்த உரிமையை கேட்டதற்காக கொல்லப்படுகிறான். பிரம்மதேயத்தை எதிர்த்ததற்காக.

வரலாறு நெடுகிலும், இந்த பிராமண கட்டமைப்பை எதிர்த்து பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. இதில் இவர்கள் திடீரென்று கூடு விட்டு கூடு பாய்கிறார்கள். ‘யக்ஞம்’ பேசியவர்கள் இப்போது அர்ச்சகர்கள் ஆகிறார்கள். யாகம் செய்தவனுக்கு என்ன அர்ச்சகம் தேவைப்படுகிறது ? இதன் மூலமாக கோவில் மீது பிடிப்பு, கோவில் சொத்துக்கள் மீது பிடிப்பு அதன் மூலமாக அரசன் மீது செல்வாக்கு செலுத்த முடியும் என்ற காரணத்தினால், அதுவரை அர்ச்சகம் செய்யாத பிராமணன் தென்னகத்தில் அர்ச்சகனாக மாறுகின்றான். இதற்காகத்தான் ஆகமங்கள் உருவாக்கப்படுகின்றன. இது தமிழ் ஆகமமா ? சமஸ்கிருத ஆகமமா ? என்பது முக்கியமில்லை. தமிழ் ஆகமம் இருந்திருக்கலாம். ஆனால் எந்தத் தமிழ் ஆகமும் இதை எதிர்த்து குரல் கொடுக்கவில்லை என்பது உண்மை. இவற்றை எதிர்த்து எத்தனையோ குரல்கள் வந்துள்ளன. அவைகள் தமிழ் இலக்கியத்தில் உள்ளன. ஆனால் யாரும் எடுத்துக் கூறுவதில்லை. திருமூலர், சிவவாக்கியர் இவர்கள் சைவ சித்தாந்தத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் ஒரு புரட்சியாளர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் பிற்காலத்தில் திருமூலர் போன்றவரை சமரசம் செய்ததாக காட்டுவார்கள். “வேர்த்திறைப்பு வந்த போது வேதம் வந்து உதவுமோ” இதை பெரியார் கூறினால் திட்டுவீர்கள் ! திருமூலர், சிவவாக்கியர் சொன்னால் எதுவும் சொல்வதில்லை.

“கல்லினை, செம்பினை, கட்டையை கும்பிடல் புல்லறிவாகுமேடி, குதம்பாய் புல்லறிவாகுமேடி” கல், கட்டைகளையெல்லாம் கும்பிடுவது புல் அறிவாகும் என்கிறார் குதம்பைச் சித்தர். இன்றைக்கு இதே கருத்தைக் கூறினால் அவர்கள் மனம் புண்படும். மனம் புண்படுகிறதென்று நீதிமன்றம் செல்வார்கள், நீதிமன்றமும் “ஆமாம் புண்படுகிறது, நீங்கள் தவிர்த்திருக்கலாமே” என்பார்கள்.

“கோவில் பல தேடி கும்பிட்டதனால் உனக்கு ஏதும் பலன் பெறுமோ ? குதம்பாய் பலன் பெறுமோ, மெய்த்தலத்தில் இல்லாத மெய்பொருளானவர் பொய்த்தலத்தில் ஏதும் உண்டோ” கடவுள் உன் உள்ளத்தில் இருக்கிறார் நீ ஏன் கோவிலுக்கு சென்று தேடிக் கொண்டிருக்கிறாய் என்கிறார் குதம்பைச் சித்தர். “கங்கை ஆடில் ஜென்மம் போகுமோ” என்கிறார். “ஓசை பெற்ற கல்லை நீர் உடைத்து உருக்கல் செய்கிறீர், பூசை பெற்ற கல்லிலே பூவும் நீரும் சாத்துவீர், வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர், ஈசனுக்குகந்த கல் இரண்டு கல்லும் அல்லவே” இந்த இரண்டு கல்லுமே கடவுள் இல்லை என்கிறார். இதைக் கூறியவர் தமிழர்.

உண்மையாகவே அறிவு இருந்தால் இதை கொண்டாடி இருக்க வேண்டாமா? கம்பனைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

கம்பராமாயணத்தை எதிர்க்க திராவிடர் இயக்கம் மேற்கொண்ட முயற்சிகள் எவ்வளவு எவ்வளவு! கம்பராமாயணத்தை எதிர்ப்பது தமிழை எதிர்ப்பதல்ல. தமிழர்களை மடையர்களாக்கும் முயற்சியை எதிர்த்தது திராவிடர் இயக்கம். “சாத்திரத்தைச் சுட்டு, சதுர்மறையைப் பொய்யாக்கி, சூத்திரத்தைக் கண்டு துயர் அறுப்பது எக்காலம்” இதைப் பாடியவர் தமிழர் தானே ? எதிர்ப்பது பார்ப்பனியத்தையும், வைதீகத்தையும். “தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி, வேத சாத்திரப் பொத்தல்களை மூடுங்கடி” தமிழில் உள்ள இலக்கியங்களில் அறிவுக்கு பொருத்தமான எந்த இலக்கியங்களைப் படிக்க வேண்டுமோ அதைப் படிக்க மாட்டார்கள். அரசனைப் புகழ்வது, பெண்களை விபச்சாரிகளாக சித்தரிக்கும் ‘மூவர் உலா’ போன்றவற்றைகளை பெருமையாக கூறுவார்கள்.

நமது நாட்டில், இந்த வைதீகப் புரட்டுக்கு எதிராக ஏன் ஒரு ஆயுதப் புரட்சி கிளர்ந்து எழவில்லையென்றால், நம் மக்களிலியேய ஒரு பிரிவினரை சற்சூத்திரர்கள் என்று வேளாளர்களை கூறிவிட்டனர். அவர்களுக்கு இந்த இரண்டாம் இடத்தில் இருப்பதில் பெரிய திருப்தி. ஒவ்வொரு ஆதீனமும் ஒரு ஜாதி நிறுவனமாக மாறியது. ஜாதி நிறுவனமாக மாறிய எவையுமே வைதீகத்திற்கு உடன்படுபவை, வைதீகத்தை வளர்ப்பவை. இந்த ஆதீனங்கள் எல்லாம் தமிழ் ஆதீனங்களாக இல்லையே என்பது தான் நமக்கு வருத்தம். பெரும்பாலான ஆதீனங்களில் கல்வி தரப்பட்டபோது முதலில் சமஸ்கிருதம் தான் பயிற்றுவிக்கப்பட்டது. சில ஆதீனங்களில் தமிழ்க் கல்வியை கொண்டு வருவதற்கு பெரும் போராட்டம் நடத்த வேண்டி இருந்தது.

மனிதம் என்பதே நமக்கு நோக்கம். மனிதத்தை சிதைக்கின்ற எதுவாக இருந்தாலும் அது சமயம் என்றாலும், அரசு தலைமை என்றாலும் நாம் இணங்க மறுக்கின்றோம் என்பது தான் பொருள். சைவம், வைணவம் என்ற பெயரில் பல மோதல்கள் நடந்தன. தமிழர்களை மோத விட்டு அழிப்பதற்காகவே சைவம், வைணவத்தை இங்கே வேரூன்ற செய்தார்கள்.

19 ஆம் நூற்றாண்டில் வள்ளலார் வாழ்ந்தார். 19ஆம் நூற்றாண்டில் தென்னகத்தில் தான் சமய விழிப்புணர்வு தலை தூக்கியது. இங்கே மூன்று பெரும் மக்கள் சமயத்திலே பெரும் பங்காற்றினார்கள். வைகுந்தர், நாராயணகுரு, வள்ளலார். வைகுந்தரும், நாராயணகுருவும் சனாதன சாம்ராஜ்யமான திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தார்கள். வள்ளலார் மட்டும் தான் ஆங்கிலேயரால் நேரடியாக ஆட்சி செய்யப்பட்ட சென்னை இராஜதானியில் இருந்தார்.

வைகுந்தரும் வைதீக எதிர்ப்பாளர், சிலை மறுப்பாளர், ஜாதி எதிர்ப்பாளர். நாராயணகுருவும் ஜாதி மறுப்பாளர், சனாதன மறுப்பாளர். இங்கே நமது வள்ளலாரும். இதில் மூத்தவர் வைகுந்தர். மூவரில் இளையவர் நாராயணகுரு. இடையில் இருப்பவர் வள்ளலார். ஆனால் நாராயணகுரு தத்துவ விளக்கம் பெறுவதற்காக அவர் நாடிய நூல்,

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அரியூரில் தீபாவளி எதிர்ப்பு கருத்தரங்கம்

*“தமிழர்களை திராவிடர்களை இழிவுபடுத்தும் தீபாவளியை புறக்கணிப்போம்; பார்ப்பன புராண தீபாவளி நரகாசூரன் கட்டுக்கதை அறிவியலுக்கு பொருந்துமா?” என்ற தலைப்பில் 24-10-2022 அன்று காலை 10.30 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் விழுப்புரம் மாவட்ட தலைவர் பூ.ஆ. இளையரசன் தலைமையில் அரியூரில் உள்ள கே.வி.ஆர் அரங்கத்தில் தீபாவளி எதிர்ப்பு கருத்தரங்கம் நடைபெற்றது.*

*நிகழ்ச்சியில் கடவுள் மறுப்பை பிரகாஷ் பேசினார். கடலூர் மாவட்ட தி.வி.க செயலாளர் சிவக்குமார் வரவேற்பு கூறினார். தொடர்ந்து மக்கள் அதிகாரம் சாந்த குமார், தமிழக வாழ்வுரிமை கட்சி பரப்புரை செயலாளர் - விஜி பகுத்தறிவு, விடுதலைச்சிறுத்தைகள் கட்சி மாவட்ட பொறுப்பாளர் - அறிவொளி, புரட்சி பாரதம் கட்சி புதுச்சேரி மாநில தலைவர் - ஓவியன், தமிழக வாழ்வுரிமை கட்சி விழுப்புரம் மாவட்டத் தலைவர் - திராவிட நாகு, தி.வி.க விழுப்புரம் மாவட்ட தலைவர் - பூ.ஆ.இளையரசன், மக்கள் அதிகாரம் - ரூபாவதி ஆகியோர் தீபாவளி புராணக் கதையில் உள்ள ஆபாசம் அறிவியலுக்கு முரணான கட்டுக்கதை தமிழர்களை இழிவுபடுத்தும் போக்கையும், தீபாவளி பண்டிகையில் வெடிக்கப்படும் பட்டாசால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு சுற்று சூழல் கெடுதல் ஆகியவைகளை பற்றியும் விளக்கினர்.*

*தீபாவாளி பண்டிகையில் பார்ப்பன ஆதிக்கதின் மேலாண்மையும் பார்ப்பனர் அல்லாத மக்களின் அடிமைத்தனத்தை பற்றி பெரியார் பேசியவை குறித்தும், தீபாவளி பண்டிகைக்கு ஊடகங்கள் திரை நடிகர்கள் கொடுக்கும் விளம்பரம் முக்கியத்துவம், தீபாவளி பண்டிக்கைகு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் கொடுக்கும் போனஸ் அதை குறிவைத்து முதலாளித்துவ நிறுவனங்கள் தூண்டும் நுகர்வெறியை வைத்து சுரண்டி கொழுத்துக் கொண்டு பார்ப்பனியத்தை வளர்த்துவரும் உள் அரசியலை புரிந்துகொண்டு திபாவளி பண்டிகையை புறக்கணிக்க வேண்டிய அவசியத்தையும், எதிர்வரும் காலத்தில் தீபாவளி உள்ளிட்ட பார்ப்பன பண்டிகையை மக்களை புறக்கணிப்பதற்கான வேலை திட்டத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.*

*நிகழ்ச்சியில் பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் ஓய்வு பெற்ற ஆசிரியர் கே.வி.ராஜன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டமங்கலம் ஒன்றிய செயலாளர் - அம்பேத்கர், மருதூர் மதிவாணன், வழக்கறிஞர் பிரபாகரன், பெரிய பாபு சமுத்திரம் முருகையன், நவமால் காப்பேரி (விசிக), விஜய், தமிழ்மாறன், சதீஷ், அப்பாஸ், விழுப்புரம் முத்து உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.*

# வேலூரில் பெரியார் வெங்கட் இல்லத் திறப்பு விழா

*வேலூர் மாவட்ட திராவிட விடுதலைக் கழகத் தோழர் பெரியார் வெங்கட் இல்லத் திறப்பு விழா 30.10.2022 அன்று வேலூர் கன்னிகா புரத்தில், மாவட்டத் தலைவர் திலீபன் தலைமையில் நடைபெற்றது .*

*திராவிடர் விடுதலை கழகத் தலைமைக் குழு உறுப்பினர் விழுப்புரம் அய்யனார் இல்லத்தினை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.*

*பெரியார் வெங்கட் வரவேற்பு கூறினார். நிகழ்வில் விழுப்புரம் கள்ளக்குறிச்சி வேலூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*திறப்பு விழாவிற்கு பின் நடைபெற்ற வேலூர் மாவட்ட ஆலோசனைக் கூட்டத்தில் வேலூர் மாநகர அமைப்பாளராக பெரியார் வெங்கட்டை நியமிக்க வேண்டும் என்று தோழர்கள் அனைவரும் ஒரு மனதாக தேர்ந்தெடுத்தனர். தலைமை ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.*

*நிகழ்வில் மாவட்டத் தலைவர் திலீபன், மாவட்டச் செயலாளர் சிவா, மாவட்டப் பொருளாளர் சதீஷ், தலைமைக் கழகச் செயற்குழு உறுப்பினர் விழுப்புரம் அய்யனார் உள்ளிட்ட தோழர்கள் இருந்தனர்.*

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*“ஒழிவில் ஒடுக்கம்” இதை பதிப்பித்தவர் வள்ளலார். இதை மலையாள மொழியில் மொழி பெயர்த்தவர் நாராயணகுரு. “மேலோர்கள் ஒன்றாகவே சிந்திக்கின்றார்கள்”. இவர்களது பொது எதிரி என்பது வைதீகம். நாராயணகுரு, “ஆங்கிலேய ஆட்சியால் பல பயன்களைப் பெற்றிருக்கிறோம். அவர்கள் மட்டும் இல்லையென்றால் சூத்திரனாகிய நான் சன்னியாசம் மேற்கொண்டதற்காக என்னுடைய தலையை இழந்திருப்பேன். இன்று என்னால் துறவி என்று இருக்க முடிகிறதென்றால் ஆங்கிலேய ஆட்சி தான் காரணம். எனவே ஆங்கிலேயர்களை என் குருவைப் போன்று மதிக்கிறேன்” என்றார். அந்நியர்கள் நம்மை சுரண்டினார்கள் என்பது உண்மை. ஆனால் அந்த அந்நியர்கள் கொடுத்த உரிமைகளைக் கூட உள்ளூர் அரசர்களும், ஆட்சியாளர்களும் தரவில்லை என்பதும் உண்மை.*

*பொதுச் சட்டம், பொதுக் கல்வியை ஆங்கிலேயர்கள் கொடுத்தார்கள். ஆதீனங்கள் நடத்திய கல்விக் கூடங்களிலே கூட பஞ்சமர்கள் அனுமதிக்கப்பட வில்லையே ஏன் ? இங்கே இருந்தது வேதக் கல்வி. ஆயிரமாண்டு அடிமை கல்வியை மாற்றி பொதுக் கல்வியை கொண்டு வந்தது ஆங்கிலேயர்கள் தான். எழுதுகிறார்கள், மெக்காலே கல்வி அடிமை முறையை கொண்டு வந்து விட்டது என்று. எனவே இந்த வைதீக எதிர்ப்புக்கு பல பரிமாணங்கள் உண்டு. இந்தியாவிலும் வைதீக எதிர்ப்பு இருந்துள்ளது, ஆனால், தமிழ்நாடு வைதீகத்திற்கு எதிராக மிகச் சிறப்பான ஒரு போராட்டத்தை நடத்தியுள்ளது. அதன் இறுதிகட்ட வடிவமாகத்தான் நாம் வள்ளலாரைப் பார்க்கின்றோம். அந்தப் பணி முடிவடையவில்லை, அந்தப் பணியை தொடர்ந்து நடத்தி அதன் இறுதி கட்டத்திற்கு கொண்டு வர ஒரு சமூக கட்டமைப்பை உறுதி படுத்துவதற்கு, போராட வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம். போராடுவோம், வெற்றி பெறுவோம்.*

# ரூபாஸ்ரீ - சபரிகிரி ஜாதி மறுப்பு சுயமரியாதை இணையேற்பு விழா




*தோழர்கள் ரூபாஸ்ரீ - சபரிகிரி ஆகியோரின் ஜாதி மறுப்பு சுயமரியாதை இணையேற்பு விழா பொள்ளாச்சி ஜமீன் ஊத்துக்குளி விவாஹா திருமண மண்டபத்தில் 30.10.2022 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.*

*நிகர் கலை குழுவினரின் பறை இசை நிகழ்ச்சியுடன் நிகழ்வுகள் தொடங்கின.*

*முன்னதாக மணமக்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். அப்பொழுது கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது.*

*முதல் நிகழ்வாக பகுத்தறிவு பாடல்களை ஆனைமலை வினோதினி, திருப்பூர் யாழிசை, யாழினி, கண்ணையா ஆகியோர் பாடினர்.*

*இணையேற்பு விழாவிற்கு கோவை மாவட்டக் கழகச் செயலாளர் வே.வெள்ளிங்கிரி முன்னிலை வகித்தார். கழகத் தோழரும் மணமகனுமான கோ. சபரிகிரி வரவேற்பு கூறினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் மணமக்கள் உறுதிமொழி ஏற்றனர்.*

*மணமக்களை வாழ்த்தி பேராசிரியர் சுந்தரவள்ளி (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்), கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பொறியாளர் தி.பரமசிவம், (திராவிடர் கழகம்), காசு.நாகராசன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை), ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), செந்தில் (தந்தை பெரியார் திராவிடர் கழகம் - சென்னை), முகில்ராசு (திவிக திருப்பூர் மாவட்டத் தலைவர்), பொள்ளாச்சி விஜயராகவன் ஆகியோர் உரையாற்றினர்.*

*தமிழ்நாடு மாணவர் கழகத்தின் தோழரும், ரூபாஸ்ரீயின் சகோதருமான திருப்பூர் மகிழவன் நன்றி கூறினார்.*

*இம்மண விழாவில் கோவை திருப்பூர் சென்னை என பல்வேறு பகுதிகளில் இருந்து கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள், மணமக்களின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.*

# கோவையை கலவர பூமியாக மாற்றத் துடிக்கும் அண்ணாமலை மீது கழகம், காவல் துறையில் புகார்

*கோவையில் கடந்த 23.10.2022 அன்று கோட்டை ஈஸ்வரன் கோவில் அருகே காரில் இருந்த சிலிண்டர் வெடித்து விபத்து நடந்தது. கோவை மாநகரக் காவல் துறை இந்த விசயத்தில் தொடர்ந்து விசாரித்து கைது நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில் விசாரணையைக் கெடுக்கும் விதமாகவும், கார் சிலிண்டர் வெடிப்பு சம்பந்தமாகவும் தொடர்ந்து மதக் கலவரத்தை உருவாக்கும் வகையில் முன்னுக்கு பின் முரணாகப் பேசி விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறார் பாஜக தலைவர் அண்ணாமலை.*

*பொது அமைதியைக் கெடுத்து கோவையை கலவர பூமியாக்கத் துடிக்கும் அண்ணாமலையை விசாரணைக்கு உட்படுத்தக் கோரியும், விசாரணையில் குற்றம் இருக்கும் பட்சத்தில் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோவை மாநகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில், மாநகர செயலாளர் நிர்மல் குமார் தலைமையில் கோவை மாநகர உதவி ஆணையாளரிடம் மனு அளிக்கப்பட்டது. மனுவைப் பெற்றுக் கொண்டவர், ‘மாநகர காவல் ஆணையாளரிடம் தகவலை சொல்கிறோம் உரிய நடவடிக்கை எடுக்கின்றோம்’ என்று கூறினார்.*

*தோழர்கள் சூலூர் பன்னீர்செல்வம், வழக்கறிஞர் சரவணன், தமிழ்ச்செல்வி, கிருஷ்ணன், மாதவன், இயல், வழக்கறிஞர் விஷ்ணு உடன் இருந்தனர்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 04th November 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN